**THE LABOUR COURT, SALEM**
**CAMP COURT AT YERCAUD**

# C.P.No.2 of 2024

**Deposition of PW1**

| | | | |
|---|---|---|---|
| Name | : திருமதி. ரீட்டா | Husband Name | : ஆண்ட்ரோஸ் |
| Village | :முருகன் நகர் | Taluk | : ஏற்காடு |
| Age | : 38 | Calling | : |

Deposition of witness for the Petitioner / Respondent solemnly affirmed by Tmt.M. Maheswari ( Bench Clerk Gr.I ) of this court on 10.03.2026 in accordance with Provisions X of Evidence Act 1872.

முதல் விசாரணை

நான் அசல் மனுவில் 2ம் மனுதாரர். எனது முதல் விசாரணை சாட்சியத்தை சத்திய பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதை எனது சாட்சியத்தின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறேன்.

1) மாண்புமிகு தொழிலாளர் நீதிமன்றம் ஐ.டி.எண்.04/2019 என்ற வழக்கில் கடந்த 17.09.2019 ம் தேதி வழங்கிய தீர்வத்தின் ஜெராக்ஸ் – Ex.P1.

2) என்னுடைய சேமிப்பு கணக்கான ஏற்காடு கிளை, இந்தியன் வங்கியின் வரவு & செலவு கணக்குகள் – ஜெராக்ஸ் – Ex.P2.

3) மாண்புமிகு தொழிலாளர் நீதிமன்றத்தில் ஐ.டி.எண்.56/2017 என்ற வழக்கில் தாக்கல் செய்த ஜாயிண்ட் மெமோவுடன் கூடிய 18(1) ஒப்பந்தமும், அதன்மீது ஏற்பட்ட தீர்வத்தின் ஜெராக்ஸ் – Ex.P3. (மேற்படி ஆவணம் இந்த வழக்கிற்கு தொடர்பில்லாதது என எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபணை செய்து ஆட்சேபணைக்குட்பட்டு ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது.)

4) தொழிற்தகராறு சட்டப்பிரிவு 18(1) ன் கீழ் 01.09.2017 ம் தேதி ஏற்பட்ட 18(1) ஒப்பந்தமும், அதன்மீது ஏற்பட்ட தீர்வத்தின் ஜெராக்ஸ் - Ex.P4. (மேற்படி ஆவணம் இந்த வழக்கிற்கு தொடர்பில்லாதது என எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபணை செய்து ஆட்சேபணைக்குட்பட்டு ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது.)

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளிற்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)

SHANTHI MUTHUSAMY

Digitally signed by SHANTHI MUTHUSAMY
Date: 2026.03.10 16:50:40 +0530

Presiding Officer,
Labour Court, Salem.